**ஓம் ஈஸ்வராய நமஹ!**

**ஆறுமுகனாரின் தீட்சை April மாதம் 2020 நிகர்நிலையில் (online) நடைப்பெற்றது. அப்பொழுது அவர் உரைத்த உபதேசம்**

அறிவின் சுடரே ஆனந்தம் நல்கிடும்
சுடரின் ஒளியே ஞானம் பெருக்கிடும்
ஞானத்தின் எல்லையில் ஆன்மா விடுபடும்
ஆன்ம விடுதலையே பிறவிப்பிணி நீக்கிவிடும்

கதிரவனின் ஒளியலைகள் காரிருள் போக்கிடும்
கர்மத்தின் வினைப்பயன்கள் தீட்சையினால் நீங்கிடும்
தீட்சையின் நற்பயன்கள் திரைகளை விலக்கிடும்
திரைகளின் நீக்கமோ ஆன்மாவினை உணர்த்திடும்

இயக்கத்தின் மூலகாரணம் ஈசனின் செயல்பாடாகும்
ஈசனின் நிர்ணயமே புவிக்கோளின் ஆற்றலாகும்
புவிக்கோளின் ஆற்றல்களே கருமைய விதியாகும்
கருமைய விதியொன்றே நஞ்சுகளின் வெளிப்பாடாகும்

மண்ணுலகில் வாழும்வரை அறிவானது இயங்கிடும்
அறிவினைத் துறந்திட்டால் விண்வாழ்வும் வசப்படும்
விண்வாழ்வு நிலைத்திட வானுலகம் வாழ்த்திடும்
வானுலகம் வாழ்த்திட்டால் ஒளிகூடும் என்றுணர்க.

நித்யமும் அநித்யமும் உணர்ந்திடப் போராடு
வையகமும் வானுலகும் இணைந்திடப் போராடு
பரமனோடு ஒன்றினைய விடுதலையை நாடிடு
நற்குருவின் துணைக் கொண்டு தீட்சையினை ஏற்றிடு.

விழிகள் இரண்டும் ஒளிவீசும்
திரைகள் நீங்கிட தூய்மையுறும்
அகமுகப் பயணம் துரிதமடையும்
உச்சி வாயிலும் திறவு கொள்ளும்

Gnanalayam

உயிரினை உணர்வாய் மானுடனே
சத்தியம் ஏற்பாய் மானுடனே
கலியினை வெல்வாய் மானுடனே
புவியினைக் காப்பாய் மானுடனே
திரைகளைக் களைவாய் மானுடனே
தீயினைத் தீண்டிடுவாய் மானுடனே
தீமைகளை அழித்திடுவாய் மானுடனே
மானுடம் காத்திடுவாய் மானுடனே.

கலியுலக எல்லையினில் வசித்திடும் மானுடர்களே! நிகழ்கின்ற காலத்தின் செய்கைகளை உணர்ந்திடுங்கள். கலியின் நிகழ்வுகள் யாவும், அழிவினையே பெருகிடும். புறத்தினிலே அழிவுகள் அதிகரித்தால், அகத்தினிலும் கழிவுகள் நீக்கப்படல் வேண்டும். அகம் என்றே அழைக்கப்படும் மானுடர்களின் சிரசானது தூய்மையுற வேண்டும். சிரசு என்ற உறுப்பானது இயக்கதிற்கு முழுமையான காரணமாய் அமைகின்றது.

உயிரின் கழிவுகளான அமிலப் படலங்களை நீக்கிட முனைந்திடல் வேண்டும். மானுடர்கள் தத்தமது இயக்கத்தின் மூல ஆற்றலை உணர வேண்டும். இயக்கத்தின் மூலம் உருவாகும் கழிவுகளையும் உணர வேண்டும். தீட்சை என்பது தீயினால் கழிவுகளை நீக்கும் தீட்சயண்யமான செயலாகும்.

**1. தீட்சை என்பது யாது?**

உயிரினை உணர்ந்துவிட மேற்கொண்டிடும் பயணத்தில் உருவாகும் தடைகளை நீக்குவதே தீட்சையாகும்.

**2. தடைகள் என்பது யாது?**

உயிரினை அறிந்திடும் மார்க்கத்தில் திரைகளாக வீற்றுள்ள அமிலக் கழிவுகளே தடைகள் ஆகும்.

**3. அமிலக்கழிவுகள் ஏன் திரைகளாய் உருமாறுகின்றன?**

விண்ணுக்கும், மண்ணுக்கும் நடைபயின்று பல பிறவிகளை மேற்கொண்டிடும் ஆன்மாவின் இயக்கத்தின் மூலமே கழிவுகள் உருவாகின்றன.

**4. கழிவுகளை ஏன், எவ்விதம் நீக்கவேண்டும்?**

கழிவுகளான திரைகளை நீக்கினால் மாத்திரமே ஆன்மா விடுதலையுறும். ஏனெனில் ஒவ்வொரு பிறவியின் இறுதியிலும் கழிவுகளும் திரைகளாகவே உருமாறி ஆன்மாவோடு பயணிக்கின்றது. கழிவுகள் அற்ற தூய்மையான ஆன்மாக்கள் மாத்திரமே விண்முகடுதனைக் கடந்து, புவியீர்ப்பு விசையினையும் துறந்து ஈசனைச் சென்றடைய இயலும்.

கழிவுகளை நீக்கிட உயர் குருவின் துணை வேண்டும். குருவானவரின் அருள் எனும் வீரியமான காந்த ஆற்றலைக் கொண்டே நஞ்சான அமிலக் கழிவுகள் நீக்கமுறும். ஆன்மா விடுதலையடைய வேண்டுமெனில் அதீத ஆற்றல் கொண்ட மற்றுமோர் ஆன்மா துணை புரிய வேண்டும். அருகினிலே நிலைத்திடும் குருவின் ஆற்றல் கிட்டினால் நற்பலன்கள் விளைந்திடும்.

**5. ஆன்மா ஏன் விடுதலையுற வேண்டும்?**

கலியின் எல்லையில் புவியானது புணரமைப்பு கண்டிடும். அத்தருணத்தில் பிறவிதனை ஏற்று வசித்திடும் ஆன்மா அதிக அளவினில் கழிவுகளை ஏற்றுவிடும். பூமியானது வெளியேற்றுகின்ற நஞ்சுகளையும் ஆன்மாவானது ஏற்க நேரிடும். அதன் மூலம் கழிவுகளும் கூடிடும், திரைகளும் வலுவுறும் அத்தகைய ஆன்மாக்கள் விண்ணேறிட இயலாது மண்ணிலே சிதறி அழிவுறும். ஆன்மத்துகள்கள் வலுவிழந்தால் விடுதலை நிகழ்ந்தேறிடாது. மானுடராய் நிலைத்திடும் ஆன்மாக்கள் அனைத்தும் அத்தருணத்தில் கொடும் துன்பங்களை எதிர் கொண்டிடும்.

**6. ஆன்ம விடுதலைக்கு தீட்சைகள் எவ்விதம் உதவிடும்?**

குரு என்கின்ற நிலைதனை ஏற்றுச் செயல்புரியும் ஆன்மா இறைநிலைகளால் நிறைவுற்றே காணப்படும். ஈசத்தொடர்பினைப் பெற்று அதீதமான காந்த ஒளியாற்றலை ஈர்த்து தம்முள்ளே சேமித்திடும் ஆற்றல் என்பது குருவாய் செயல்புரிகின்ற ஆன்மாக்களுக்கு உண்டு.

எதிர் தோன்றிடும் மானுடர்களுக்குத் தீட்சையினை வழங்குவதின் மூலம் தம்முடைய அதீதமான உயிராற்றலை ஒரு குருவானவர் உட்செலுத்திடுவார்.

தொலைவினிலே வசித்திடும் ஆன்மாக்களுக்கும் தமது ஆன்ம ஆற்றலைப் பகிர்ந்திட இயன்றால் குருவின் நிலையானது மேன்மையுறும்.

எண்ணங்களை ஒருங்கிணைத்து, ஆன்ம ஆற்றல்களைக் குவித்து, வீரியமான ஒளியிழைகளாகத் திரித்து தொலைவினில் வசித்திடும் ஆன்மாவினை நோக்கிச் செலுத்தி, தீட்சைகளை அருளி, நஞ்சினை அழித்திட இயலும் எனில் அவ்வான்மாவானது உயரிய குருவாகவே நிலைத்திட இயலும்.

**7. தீட்சையினை எவ்விதம் ஏற்கவேண்டும்?**

அறிவினால் ஆன்மாவினை அடைவது என்பது, குருவின் துணைகொண்டு பரமாத்மாவினை அடைவதற்கு ஒப்பாகும். பரமாத்மாவினை உணர்வதற்கு வழிவகை புரிந்திடும் குருவினைப் பணிவுடன் ஏற்பதன் மூலமே தீட்சையானது பலனை நல்கிடும்.

ஆறுமுக தீட்சையினை குருவின் துணை கொண்டு ஏற்று, திரைகளை நீக்கி ஆன்ம தரிசனம் காணவேண்டும். பணிவோடு குருவினை ஏற்க வேண்டும், நம்பிக்கையோடு தீட்சைதனைப் பயின்றிடல் வேண்டும், ஆன்ம விடுதலை ஒன்றே குறிக்கோளாய் அமைந்திடல் வேண்டும்.

ஆன்ம விடுதலை ஒன்றே இலக்கு என்றே கருதி தீட்சையினை ஏற்று பக்குவ நிலைதனை எய்திடல் வேண்டும். உணர்வு நிலையினில் தீட்சையினை ஏற்போர் உத்தம நிலைகளை எய்திடுவர்.

**வாழ்த்துகின்றோம்.**

Gnanalayam